உ
சிவமயம்



தம்பிலுவில்
திருமதி திருமகள் இராமலிங்கம்
அவர்கள் அமரத்துவமடைந்த

# 31 வது நாள் நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருமதி திருமகள் இராமலிங்கம்



**பூமித்தாயின் மடியில்**
**09.12.1931**

**தேவதாயின் மடியில்**
**28.08.2000**

## மனிதனைத் தெய்வமாக்கவல்ல ஸ்ரீ காயத்ரீ மந்திரம்

ஓம் பூர் புவ: ஸ்வ:
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோ ந: ப்ரசோதயாத்

– ஸ்ரீ காயத்ரீ சித்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி துணை
ஔவையார் அருளிச் செய்த

# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வண்ண மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
ஐந்து கரமு மங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாவிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியு மிலங்குபொன் முடியுந்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ்ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தெ னுளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளி
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை யடக்கு முபாயம்
இன்புறு கருணை யினிதெனக் கருளிக்
கருவி ளொடுங்கும் கருத்தினை யறிவித்து
இருவினை தன்னை யறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயி லொருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை டைப்பதுங் காட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையி னெழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் காபலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பி னாவி லுணர்த்திக்
குண்டலியதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையு மாதித்த னியக்கமுங்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தி னீரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தி னுறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூட்சமும்
எண்முக மாக வினிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக் கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லாமனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்தி என்செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத் தினுள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத் தினுள்ளே சிவலிங்கம் காட்டிச்
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக் கப்பாலாய்
கணு முற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடும் மெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும் பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்துத்
த்தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

விநாயகர் அகவல் முற்றிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா அஷ்டோத்ர சத நாமாவளி

1. ஓம் ஸ்ரீ பகவான் ஸத்ய ஸாயி பாபாய நம:
2. ஓம் ஸ்ரீ ஸாயி ஸத்ய ஸ்வரூபாய நம:
3. " ஸ்ரீ ஸத்ய தர்ம பராயணாய நம:
4. " ஸ்ரீ வரதாய நம:
5. " ஸ்ரீ சத் புருஷாய நம:
6. " ஸ்ரீ சத்ய குணாத்மனே நம:
7. " ஸ்ரீ சாது வர்த்தனாய நம:
8. " ஸ்ரீ சாது ஜன போஷணாய நம:
9. " ஸ்ரீ சர்வக் ஞாய நம:
10. " ஸ்ரீ சர்வ ஜன ப்ரியாய நம:
11. " ஸ்ரீ சர்வ சக்தி மூர்த்தியே நம:
12. " ஸ்ரீ சர்வேசாய நம:
13. " ஸ்ரீ சர்வ சங்க பரித்யாகினே நம:
14. " ஸ்ரீ சர்வாந்தர் யாமினே நம:
15. " ஸ்ரீ மஹிமாத்மனே நம:
16. " ஸ்ரீ மகேஸ்வர ஸ்வரூபாய நம:
17. " ஸ்ரீ பர்த்தி கிராமோத் பவாய நம:
18. " ஸ்ரீ பர்த்தி க்ஷேத்திர நிவாசினே நம:
19. " ஸ்ரீ யசகாய ஷிர்டி வாசினே நம:
20. " ஸ்ரீ ஜோடி ஆதிபல்லி சோமப்பாய நம:
21. " ஸ்ரீ பாத்வாஜ ரிஷி கோத்ராய நம:
22. " ஸ்ரீ பக்த வத்சலாய நம:
23. " ஸ்ரீ அபாந்தராத்மனே நம:
24. " ஸ்ரீ அவதார மூர்த்தியே நம:
25. " ஸ்ரீ சர்வ பய நிவாரிணே நம:
26. " ஸ்ரீ ஆபஸ்தம்ப சூத்திராய நம:
27. " ஸ்ரீ அபய ப்ரதாய நம:
28. " ஸ்ரீ ரத்னாகர வம்சோத்பவாய நம:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. ” ஸ்ரீ சாயி ஷிர்டி ஸாயி அபேத சக்தி அவதாராய நம:
30. ” ஸ்ரீ ” சங்காரய நம:
31. ” ஸ்ரீ ” ஷிர்டி ஸாயி மூர்த்தியே நம:
32. ” ஸ்ரீ ” துவாரகா மாயி வாஸினே நம:
33. ” ஸ்ரீ ” சித்ராவதி தடபுட்டபர்த்தி விஹாரிணே நம:
34. ”’ ஸ்ரீ ” சக்தி ப்ரதாய நம:
35. ” ஸ்ரீ ” சரணாகத த்ராணாய நம:
36. ” ஸ்ரீ ” ஆனந்தாய நம:
37. ” ஸ்ரீ ” ஆனந்த தாய நம:
38. ” ஸ்ரீ ” ஆர்த்த த்ராண பராணாய நம:
39. ” ஸ்ரீ ” அனாத நாதாய நம:
40. ” ஸ்ரீ ” அஸஹாய சஹாயாய நம:
41. ” ஸ்ரீ ” லோக பாந்தவாய நம:
42. ” ஸ்ரீ ” லோக ரக்ஷா பராயணாய நம:
43. ” ஸ்ரீ ” லோக நாதாய நம:
44. ” ஸ்ரீ ” தீனஜன போஷணாய நம:
45. ” ஸ்ரீ ” மூர்த்தி த்ரய ஸ்வரூபாய நம:
46. ” ஸ்ரீ ” முக்தி ப்ரதாய நம:
47. ” ஸ்ரீ ” கலுஷ விதுராய நம:
48. ” ஸ்ரீ ” கருணாகராய நம:
49. ” ஸ்ரீ ” சர்வா தாராய நம:
50. ” ஸ்ரீ ” சர்வ ஹ்ருத வாசினே நம:
51. ” ஸ்ரீ ” புண்ண பலப்ரதாய நம:
52. ” ஸ்ரீ ” சர்வ பாப க்ஷயகராய நம:
53. ” ஸ்ரீ ” சர்வ ரோக நிவாரிணே நம:
54. ” ஸ்ரீ ” சர்வோ பாத ஹராய நம:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

55. ஓம் ஸ்ரீ ஸாயி அனந்தநுத கர்த்தாய நம:
56. ” ஸ்ரீ ஸாயி ஆதி புருஷாய நம:
57. ” ஸ்ரீ ஸாயி ஆதி சக்தியே நம:
58. ” ஸ்ரீ ” அபரூப சக்தியே நம:
59. ” ஸ்ரீ ” அவ்யக்த ரூபிணே நம:
60. ” ஸ்ரீ ” காம க்ரோத த்வம்ஸினே நம:
61. ” ஸ்ரீ ” கனகாம்பர தாரிணே நம:
62. ” ஸ்ரீ ” அற்புத சர்யாய நம:
63. ” ஸ்ரீ ” ஆபத் பாந்தவாய நம:
64. ” ஸ்ரீ ” ப்ரேமாத்மனே நம:
65. ” ஸ்ரீ ” பிரேம மூர்த்தயே நம:
66. ” ஸ்ரீ ” ப்ரேம ப்ரதாய நம:
67. ” ஸ்ரீ ” ப்ரியாய நம:
68. ” ஸ்ரீ ” பக்த ப்ரியாய நம:
69. ” ஸ்ரீ ” பக்த மந்தாராய நம:
70. ” ஸ்ரீ ” பக்த ஜன ஹ்ருதய விஹாராய நம:
71. ” ஸ்ரீ ” பக்த ஜன ஹ்ருதயாலயாய நம:
72. ” ஸ்ரீ ” பக்தபராதீனாய நம:
73. ” ஸ்ரீ ” பக்தி ஞான ப்ரதீபாய நம:
74. ” ஸ்ரீ ” பக்தி ஞான ப்ரதாய நம:
75. ” ஸ்ரீ ” சுஞ்ஞான மார்க்க தர்சகாய நம:
76. ” ஸ்ரீ ” ஞான ஸ்வரூபாய நம:
77. ” ஸ்ரீ ” கீதா போதகாய நம:
78. ” ஸ்ரீ ” ஞான சித்தி தாய நம:
79. ” ஸ்ரீ ” சுந்தர ரூபாய நம:
80. ” ஸ்ரீ ” புண்ய புரு ஷாய நம:
81. ” ஸ்ரீ ” பலப்ரதாய நம:
82. ” ஸ்ரீ ” புருசோத்தமாய நம:
83. ” ஸ்ரீ ” புராண புருஷாய நம:
84. ” ஸ்ரீ ” அதீதாய நம:
85. ” ஸ்ரீ ” காலாதீதாய நம:
86. ” ஸ்ரீ ” சித்தி ரூபாய நம:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

87. " ஸ்ரீ ஸாயி சித்தி சங்கல்பாய நம:
88. " ஸ்ரீ " ஆரோக்கிய ப்ரதாய நம:
89. " ஸ்ரீ " அன்ன வஸ்திர தாய நம
90. " ஸ்ரீ " சம்சாரதுக்க ஷயகராய நம:
91. " ஸ்ரீ " சர்வாபீஷ்ட ப்ரதாய நம:
92. " ஸ்ரீ " கல்யாண குணாய நம:
93. " ஸ்ரீ " கர்ம த்வம்சினே நம:
94. " ஸ்ரீ " சாது மானஸ சோபிதாய நம:
95. " ஸ்ரீ " சர்வமத சம்மதாய நம:
96. " ஸ்ரீ " சாது மானஸ பரிசோதகாய நம:
97. " ஸ்ரீ " சாதகானுக்ரஹ வடவ்ருஷ ப்ரதிஷ்டாபகாயநம:
98. " ஸ்ரீ " சகல சம்சய ஹராய நம:
99. " ஸ்ரீ " சகல தத்வ போதகாய நம:
100." ஸ்ரீ " யோகீஸ்வராய நம:
101." ஸ்ரீ " யோகீந்தர வந்திதாய நம:
102." ஸ்ரீ " சர்வ மங்கள கராய நம:
103." ஸ்ரீ " சர்வ சித்தி ப்ரதாய நம:
104." ஸ்ரீ " ஆபந் நிவாரினே நம:
105." ஸ்ரீ " ஆர்த்தி ஹராய நம:
106." ஸ்ரீ " சாந்த மூர்த்தயே நம:
107." ஸ்ரீ " சுலப ப்ரசன்னாய நம:
108." ஸ்ரீ " பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாய நம:

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

மங்களம் ! மங்களம் ! மங்களம் !

பகவான் சாயி பஜனை முற்றிற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்களை விட்டு என்றும் பிரியாத எங்கள் குல தெய்வமே! நீங்கள் எங்கு சென்றீர்கள்? எங்களை விட்டு ஏன் பிரிந்தீர்கள்? எல்லாம் விளங்காத புதிராக இருக்கின்றதே! இறைவனுக்கு மட்டும் தான் எல்லாம் விளங்கும்.

நாங்கள் எங்கள் நித்திய கண்ணீரால் எங்கள் இதயக் கமலத்தைக் கழுவி எம் அன்னையின் பாத கமலங்களில் இந்த அஞ்சலி மலரைச் சமர்ப்பிக்கின்றோம்.

பண்பால், பாசத்தால், இன்சொல்லால் எந்நேரமும் எங்களை மகிழ்விக்கும் உங்கள் இனிய வதனத்தை எங்களால் மறக்க முடியவில்லை. தெய்வீக அணைப்பில் எம்மை ஆதரித்து ஆளாக்கி வளர்த்த எங்கள் குல விளக்கின் பாதங்களில் எமது சிரம் தாழ்த்தி, கரம் கூப்பி வணங்குகின்றோம்.

தன்னலம் கருதாது பதிபத்தினியாய், இனிய அன்னையாய், அன்பு மாமியாய், பொறுப்புள்ள அக்காளாய், பண்புள்ள மச்சாளாய், பாசமுள்ள பேத்தியாய், எங்களுக்காகவே வாழ்ந்து எங்களுக்காகவே பிரார்த்தித்து எங்கள் நினைவுடனேயே உங்கள் இறுதி யாத்திரையை மேற்கொண்ட எங்கள் குலதெய்வமே! நாங்கள் எவ்வாறு சாந்தியடைவோம். நித்தமும் உங்கள் நினைவால் மனம் கலங்கி கண்ணீர் மல்கி எங்கள் குல தெய்வத்தைப் பிரார்த்திக்கிறோம்.

உற்றார் உறவினர் சூழ்ந்து வர, மக்கள் மருமக்கள், பேரன்மார் கதறியழ, எங்களுக்காகவே வாழ்ந்து எங்கள் நினைவுடனேயே இறுதி யாத்திரையை மேற்கொண்ட எங்கள் குல தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல சித்தி விநாயகரையும், தம்பிலுவில் கண்ணகி அம்மனையும், சிரம் தாழ்த்தி கரம் கூப்பி பிரார்த்தனை செய்து வேண்டிக் கொள்கின்றோம்.!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலி

மீன்பாடும் தேனாடாம் மட்டுநகரின் தெற்கே எழிலும் அருளும் கொண்டு விளங்கும் கற்புக்கரசி கண்ணகி வாழ் தம்பிலுவில் பதி தன்னில், முருக பக்தராக பிறர் போற்ற வாழ்ந்த கணபதிப்பிள்ளை என்பவருக்கு, ஏகபுதல்வனாகப் பிறந்த ஆறுமுகம், மட்டுநகர் சென், மைக்கேல் கல்லூரியில் தமிழும் ஆங்கிலமும் கற்று இளம் வயதிலேயே, நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பதவியில் அமர்ந்து, சம்மாந்துறையில் உடையார் பரம்பரையைச் சேர்ந்த தங்கம்பிள்ளை என்ற குணவதியைத் திருமணம் செய்தார். ஸ்ரீ சித்திர வேலாயுதர் சுவாமி ஆலய (திருக்கோவில்) தனாதிகாரியாகவும், கிராமத்தின் முக்கியமானவராகவும் விளங்கினார். இத்தகைய பெருமை மிக்க பெற்றோருக்குச் சிரேஷ்ட புத்திரியாகப் பிறந்து செல்லமாக தில்லையம்மா என்று அழைக்கப்பட்டவர் திருமகள் ஆவார். இவர் இளமையில் கூர்ந்த மதிபடைத்தவராகவும், பெற்றோருக்கு பொறுப்புணர்ச்சியுள்ள மகளாகவும் சிறந்து விளங்கிய நல்மங்கையை, சான்றோர் பலர் வாழும், மருதமும் நெய்தலும் சூழப் பெற்ற நிந்தவூரில் சிறப்புடன் உயர் வேளாளர் குலத்தில் பிறந்து கோயில் கட்டி பூசை செய்த பரம்பரையில் வாழ்ந்த கந்தையாபிள்ளை, அன்னமுத்து ஆகியோரின் புதல்வனாகப் பிறந்த இராமலிங்கம் ஆகிய நான் சிறப்புடன் திருமணம் செய்தது பெரும் பாக்கியமே. அதன் பலனால் இல்லறமே நல்லறமாக, திருக்கைலாயமலையில் வைத்த விளக்குப் போல் வாழ்ந்து பஞ்ச பாண்டவர்களைப் போல் வாமதேவன், ஜெகதேவன், இரவீந்திரதேவன், பாஸ்கரதேவன், சகாதேவன் எனும் ஐந்து தேவர்களைப் பெற்று இனிது வாழ்ந்தோம்.

பெற்றெடுத்த தாய் தந்தையர் பாசத்தோடு சூட்டிய திருமகள் என்ற பெயருக்கேற்ப, உற்றார், உறவினர், அயலவர் அனைவரையும் எப்போதும் அன்பாகவும், பண்பாகவும் அவர்களின் தேவைகளை முகமலர்ச்சியுடன் நிறைவு செய்து, திருமகளாகவே இறையடி சேர்ந்தார்.

கணவனே கண்கண்ட தெய்வம் என உணர்ந்து, நான் தொழில் மாற்றம் பெற்றுச் சென்ற இடமெல்லாம் என்னுடன் இணைந்து வந்து, அங்குள்ள சகல மக்களினதும் உள்ளத்தில் அழியாத இடத்தைப் பெற்றார். கொழும்பு மாநகரத்தில் வாழ்ந்த இறுதிக் காலத்தில், அன்புக் கணவராகிய என் மடியில் வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் ''பிள்ளையாரே, பிள்ளையாரே, காப்பாற்று'' என்று சொல்லி, நான் திருநீறு சாற்றிக் கொண்டிருந்த வேளையில் காலன் உயிரைக் கவர்ந்து விட்டான்.

கணவனுக்கு அன்பும் பொறுப்புணர்ச்சியுமுள்ள மனைவியாகவும், பிள்ளைகளுக்கு பாசமும், பற்றும், அக்கறையுமுள்ள தாயாகவும், மருமக்களுக்கு அன்பு ஊற்றாகவும், சகோதரர்களுக்கு வழிகாட்டியாகவும், பேரப்பிள்ளைகளுக்குத் தெய்வத் தாயாகவும், ஊரவர்களுக்கு வள்ளலாகவும், நல்லவற்றையே சிந்துத்து, நல்லவைகளையே செய்து வாழ்ந்த என் ஆருயிர்த் துணைவியை, எல்லோருக்கும் இனியவரை 28.08.2000ல் இழந்துவிட்டேன். கால தேவதையின் திருவிளையாடல் எம்மைத்துயருறச் செய்கின்றது.

என் ஆருயிர் துணைவியாரின் நினைவாக இவ்வஞ்சலிமலர் சமர்ப்பணம்!

**கணவர் : க. இராமலிங்கம்**

**"ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ இம் மானிலத்தில்"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோதரியே அக்காவே,

உன் சொல் அமுதம் இன்றும் இனிக்கின்றதே. நீ மரணித்தது என்று யார் கூறியது ? உன்தம்பி உன்னைக்காண வந்துள்ளேன், பார். வழைமைபோல், வாதம்பி என்று ஏன் என்னை அழைக்கவில்லை! என்ன பிழை செய்தேன் சோதரியே ! ஐயகோ இனி எனக்கு உன்னைப்போல் ஆறுதல் தர யார் உள்ளார் அக்கா ! என் மகனை நோயில் இருந்து விடுவித்து நயமாக்க நீ செய்த உதவிகளை மறக்கலாமோ? உன் உதவி எனக்கு கிடைக்கவில்லையாகில் என் மகன் நலமாகி இருப்பானோ? அவன் உள்ளம் குமுறுவதைப் பார் சோதரியே! வாரி வழங்கிய கை ஓய்ந்ததுவோ! இன்சொல் வழங்கிய வாய் இனி திறவாதோ அக்கா? உன் ஆத்ம சாந்தி அடைய பிராத்திக்கிறேன் அக்கா

**தம்பி**
**ஆ.தட்சணாமூர்த்தி**

அம்மா! எங்களை ஈன்ற அன்புத்தாயே, எங்கள் மீது ஒரு போதும் நீ சொல்லம்பு தொடுத்ததில்லை. எங்களை நீ ஒரு போதும் மனம் கோண வைத்ததில்லை எங்கள் தெய்வமாகவிருந்து மனக்குறைகளைப் போக்கி வந்தாய். எங்கள் இன்னல்கள் பல களைந்தாய். எங்களைக் கல்விகற்க வைத்து வாழ்வாங்கு வாழ வைத்தாய். இன்று நீ எங்களை துயரப்பட வைத்து மறைந்தனையே தாயே! உன் பேரன் குகன் உன் அருகே இருக்கும் போதெல்லாம் எமக்கும் தெரியாமல் அவனது தேவைகளை பூர்த்தி செய்வது எமக்கு தெரியுமம்மா! அவன் கண்ணீர் வடிப்பதை பாரம்மா! அவனுக்கு நாம் என்ன ஆறுதல் சொல்லுவது? இனி எமக்கு என்ன ஆறுதல் வரப்போகிறது?

**- பிள்ளைகள் -**

எங்கள் எண்ணமே உன் எண்ணமாய் கொண்டு எம்மிதயத்தில் குடிகொண்டு தாயாக வாழ்ந்த அக்காவே, உடன் பிறப்பே எங்கள் கண்கள் குளமாகுவதை பார் அக்கா, மங்கலமாய் ஒளி வீசிய குடும்பத்தில் மணி விளக்காய் நீ இருந்தாய்! அவ்விளக்கு நீ மறைந்ததனால் எம் வாழ்வில் இருளேதான் சோதரியே! என்றும் உன் நினைவில் வாடுகிறோம்.

**- சகோதரிகள் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமாவளிகள்

மானச பஜரே குரு சரணம்
துஸ்தர பவ சாகர சரணம்
குருர் ப்ரஹ்மா குருர் விஷ்ணு குருதேவா மஹேஸ்வர
குரு ஸாஷாத் பரப்ரஹ்மா தஸ்மை ஸ்ரீகுரவே நம

## 1. விநாயகர்

அம்பிகை தனயா விநாயகா
கஜவதனா கணநாத விநாயகா
ஸாயி கணேசா விநாயகா - (அம்பிகை)
த்ரிபுவன பாலக மங்கள தாயக
வித்யா புத்தி சித்தி ப்ரதாயக
ஸாயி கணேசா விநாயகா

## 2. குரு

குரு தேவாய நமோ நமோ
ஹே பரமேஸ்வர நமோ நமோ
ஓங்காராய நமோ நமோ
பர்த்தி புரீஸ்வர நமொ நமொ
ஜகதீஸ்வராய நமோ நமோ
பிரசாந்தீஸ்வர நமோ நமோ

## 3. சிவன்

கங்காதர ஹர கௌரிசிவா
சம்பொ சங்கர சாம்ப சிவா
ஜய ஜயதீஸ்வர ஜய பரமேஸ்வர
சிர்டி நிவாசா சாயீஸ்வரா
பர்த்தி புரீசா சாயீஸ்வரா
ஜக தோத்தாரா சாயீஸ்வரா
சம்போ சங்கர சாம்பசிவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. சக்தி

அந்தர் ஜோதி ஜலாவோ சாயி
ப்ரம்ம சனாதனி தயாகரோ
தயாகரோ ஹே பூர்ண ஜோதிர்மயி
சிவசக்தி மயி க்ருபாகரோ
தீனதயா மயி பத்த பாவனி
சாயி ஜக ஜனனீ தயாகரோ.

## 5. முருகன்

அரகரோகரா அரகரோகரா அரகரோகரா சுவாமி
ஆறுமுக வேலனுக்கு அரகரோகரா
கதிர்காம கந்தனுக்கு அரகரோகரா செல்வ
சத்ய சாயி முருகேசனுக்கு அரகரோகரா
திருச்செந்தூர் வேலனுக்கு அரகரோகரா
பழனிமலை அப்பனுக்கு அரகரோகரா

## 6. இராமர்

இராமனும் கிருஷ்ணனும் சாயிராமா
ஹரியும் ஹரனும் சாயிராமா
அன்பும் அருளும் சாயிராமா
அன்னையும் பிதாவும் சாயிராமா
உடலும் உயிரும் சாயிராமா
உணவும் நீரும் சாயிராமா
சீரடி சாயி சாயி ராமா
ஸ்ரீ சத்ய சாயி சாயிராமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. கிருஷ்ணர்

கோவிந்த க்ருஷ்ண ஜய்
கோபால க்ருஷ்ண ஜய்
கோபால பால பால ராதே க்ருஷ்ண ஜய்
க்ருஷ்ண ஜய் க்ருஷ்ண ஜய் க்ருஷ்ண ஜய்
க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஜய்
(கோவிந்த)

ராமா க்ருஷ்ண ஜய் ராதே க்ருஷ்ண ஜய் பாலா
க்ருஷ்ண ஜய்
(கோவிந்த)

## 8. சாயி

சின்னஞ் சிறிய சிங்கார பாதம்
நளின நடை பயில வந்திடும் பாதம்
பர்த்தியிலே விளையாடிய பாதம்
பரமன் ஸ்ரீ சத்ய சாயீசன் பாதம்
அடிமேல் அடிவைத்து அசைத்து வரும் பாதம்
வருடித் தொழுமுன் வந்து நின்றிடும் பாதம்
அன்புடனே ஒரு கணம் நினைத்தாலே
எங்கிருந்தாலும் ஓடோடி வரும் பாதம்

## 9. சர்வ தர்ம

சத்ய தர்ம சாந்தி ப்ரேம ஸ்வரூபா
ப்ரசாந்தி நிலையா தேவா
ராமா ஹேக்ருஷ்ணா ஹோ சாயி ராம தேவா
சிவசக்தி ஸ்வரூபா பாபா
ஹே தீனபாலனா பாபா
ஹே ப்ரசாந்தி நிலயா பாபா
ஹே பூர்ணாவதாரா பாபா
அல்லா ஹோ மௌலா ஹோ
சாயி ராம தேவா

ஓம் சாந்தி சாந்தி சாந்தி
மங்களம் மங்களம் மங்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவயோக சுவாமிகள்

# நற்சிந்தனைகள்

1. நந்தி முகத்தனைச் சங்கரன் மைந்தனைத்
தொந்தி வயிறனை தோடணி செவியனை
இந்திர னுக்கருள் ஈய்ந்த இறைவனை
மந்திர ரூபனை நான் மறவேனே.

2. ஒருவனாலே உலகம் உதித்தது
ஒருவனாலே உலகம் நிலைத்தது
ஒருவனாலே உலகம் ஒடுங்கிடும்
ஒருவனேஎன் உயிர்த்துணை யாமே

3. ஒருவனே ஒரு மூவருமானான்
ஒருவனே எல்லா உயிர்களுமானான்
ஒருவனே எல்லா உலகமும் ஆனான்
ஒருவனே என்னை உய்யவைத்தானே

4. சிவனை யல்லாமல் தேவருமில்லை
சிவனை யல்லாமல் சீவரு மில்லை
சிவனை யல்லாமல் தேகமு மில்லை
சிவனை என் சித்தத்துட் கண்டு கொண்டேனே

5. நகரத்து ள்ளே நான்முக னானான்
மகரத் துள்ளே மாலவ னானான்
சிகரத் துள்ளேன் சிவனாய் நின்றான்
வகரத் துள்ளே அருள்வடி வானானே

6. அண்ட சராசரம் அவன்வடி வாகும்
அண்ட சராசரம் அவனேயாகும்
அண்ட சராசரத் ததிசயம் தன்னை
அண்டரும் அறியார் அதிசயித் தாரே

7. சிவபக்தியாலே சிந்தை குவிந்தது
சிவபக்தி யாலே சிந்தை தெளிந்தது
சிவபக்தி யாலே சிந்தை இறந்தது
சிவபக்தி யாலே சீவன் முத்தியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. சிவசிவ என்று சிந்திப்பர் தேவர்
சிவசிவ என்று சிந்திப்பர் சீவர்
சிவசிவ என்று சிந்திப்பர் முனிவர்
சிவசிவ என்னச் சிவகதி யாமே

9. பக்தி செய்து பந்தத்தை நீக்கினேன்
பக்தி செய்து பரமனைக் கண்டேன்
பக்தி செய்யும் பாக்கியம் பெற்றேன்
பக்திக் கடலில் படிந்திருந்தேனே

10. ஒன்றை நினைத்து என் உள்ளம் ஒடுங்கிற்று
ஒன்றை நினைத்து என் உள்ளம் களித்தது
ஒன்றை நினைத்து என் உள்ளம் உயர்ந்தது
ஒன்றை நினைத்து ஒன்றானேனே

11. அஞ்செழுத் தாலே ஆக்கை பிறந்தது
அஞ்செழுத் தாலே ஆன்மா சிறந்தது
அஞ்செழுத் தாலே ஆனந்த மாயிற்று
அஞ்செழுத் துள்ளே அடங்கிநின் றேனே.

12. அஞ்செழுத் தாலே சஞ்சலம் அழிந்தது
அஞ்செழுத் தாலே பஞ்சம் ஒழிந்தது
அஞ்செழுத் தாலே ஆனந்த மாயிற்று
அஞ்செழுத் துள்ளே அடங்கி நின்றேனே.

13. அஞ்செழுத் தாலே அரனடி காணலாம்
அஞ்செழுத் தாலே அகிலத்தை ஆளலாம்
அஞ்செழுத் தாலே அகவினை தீர்க்கலாம்
அஞ்செழுத்து மென் நெஞ்சம் புகுந்ததே.

14. ஆறாறுக்கப்பால் ஆனந்தக் கூத்து
ஆறாறுக்கப்பால் ஆனந்த வீடு
ஆறாறுக்கப்பால் ஆர்தான் ஈடு
ஆறாறுக்கப்பால் சென்றோரைக் கூடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பனும் அம்மையுஞ் சிவமே
அரிய சகோதரருஞ் சிவமே
ஒப்பில் மனைவியுஞ் சிவமே
ஓதரும் மைந்தரும் சிவமே
செப்பில் அரசருஞ் சிவமே
தேவாதி தேவருஞ் சிவமே
இப்புவி எல்லாஞ் சிவமே
என்னை யாண்டதுஞ் சிவமே

**(சிவயோக சுவாமிகள்.....)**

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் வணக்கம்

திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானை
காதலாற் கூப்புவர் தம்கை.

## தேவாரம்

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா
உன்னடி என் மனத்தே
வழுவாதிருக்க வரந்தர வேண்டும்
இவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள்
செய் பாதிரிப் புலியூர்
செழுநீர்ப் புனற் கங்கை செஞ்சடை
மேல் வைத்த தீவண்ணனே!

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
யாரொடு நோவேன் யார்க்கெடுத்து உரைப்பேன்
ஆண்ட நீ அருளிலை யானால்
வார்கடல் உலகினில் வாழ்கிலேன் கண்டாய்
வருக வென் றருள் புரியாயோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியே
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்றவெம் சிவனை
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னை கண்டு கண்டுள்ளங்
குளிர என் கண் குளிர்ந்தனவே!

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்க நம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலகப்
பொன்னின் செம் மண்டபத்துள்ளே புகுந்து
பவனியெல்லாம் விளங்க
மன்ன நடை மடவாளுமை கோனடியோ
முக்கருள் புரிந்து
பின்னை பிறவியறுக்க நெறி தந்த
பித்தற்கும் பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின்
வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேன் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின்
கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெரு வாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள் வாயே!
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத்தி நிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தரலங்காரம்

விழிக்குத்துணை திருமென் மலப் பாதங்கள்
மெய்மை குன்றா
மொழிக்குத்துணை முருகா என்னும்
நாமங்கள் முன்பு செய்த
பழிக்குத்துணை அவன் பன்னிரு தோளும்
பயந்த தனி
வழிக்குத்துணை வடிவேலும் செங்கோடன்
மயூரமுமே

## கந்தரனுபூதி

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒலியாய்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம்
சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது
உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம்
வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக
உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் குடும்பத்தலைவி அமரர் திருமகள் இராமலிங்கம் அவர்களின் மறைவின்போது நேரில் வந்து கலந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், மற்றும் சகல விதங்களிலும் எமக்கு ஆதரவு நல்கியவர்களுக்கும், வீட்டுக் கிருத்திய அந்தியேட்டி அழைப்பை ஏற்று அன்னாரின் ஆத்ம சாந்திப் பிராத்தனையில் கலந்து கொண்டோருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
**க.இராமலிங்கம் (கணவர்), மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# குடும்பச் சங்கிலி

கந்தையாபிள்ளை இராமலிங்கம் (தந்தை) — ஆறுமுகம் திருமகள் (தாய்)

| மக்கள் | மருமக்கள் | பேரப்பிள்ளைகள் |
|---|---|---|
| வாமதேவன் | ஜெகதாம்பிகை | குகப்பிரியன் |
| ஜெகதேவன் | | |
| ரவீந்திரதேவன் | சுபாஷினி | கிருஷான்<br>நிஜேவிதா |
| பாஸ்கரதேவன் | பிரியதர்ஷினி | |
| சகாதேவன் | தனுஷா | சியாம் ஷங்கர்<br>ராம் ஷங்கர் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Jet Printings
Colombo - 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org